தினத் தந்தி
DAILY THANTHI

திண்டுக்கல் (1-6-2023)
வியாழக்கிழமை
DINDIGUL

மலர் 81
இதழ் 212
VOL 81
ISSUE 212





# பாலில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தால் அதிக லாபம் பெறலாம்

இன்று (வியாழக்கிழமை) உலக பால் தினம் ஆகும். பாலின் முக்கியத்துவம் மற்றும் அதில் அடங்கியுள்ள சத்துக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1–ந்தேதி உலக பால் தினமாக கொண்டாடப்படுகிறது.

பால் பண்ணை தொழிலானது கிராமப்புற பொருளாதாரத்தில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. பால் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்காக உள்ளது. பால் நமக்கு தேவையான அனைத்து சத்துக்கள் அடங்கிய ஓர் உணவுப்பொருள். மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு பால் அவசியம் என்பதால் தான் அடிப்படை உணவு பட்டியலில் பாலும் இடம் பெற்றுள்ளது.



பாலை அப்படியே விற்க முடிந்தால் நல்ல லாபம் பெற வாய்ப்புண்டு. பெரும்பாலும் அனைத்து வளர்ந்த நாடுகளும் பால் உற்பத்திக்கு கிராமங்களையே சார்ந்துள்ளன. ஆனால் பாலின் தேவை பெரிய நகரங்களில் தான் அதிகம். எனவே கிராமங்களின் உற்பத்தியாகும் பால் தகுந்த முறையில் சேகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு நகரங்களைச் சென்றடைய வேண்டும். சாதாரணமாக மாட்டில் இருந்து பெறப்பட்ட பால் சுமார் 3–6 மணி நேரம் வரை தான் கெடாமல் இருக்கும். எனவே பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி அதிகமுள்ள காலங்களில் தங்களிடமுள்ள உபரியான பாலை மதிப்புக்கூட்டி பால் பொருட்களாக விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் லாபம் பெற முடியும்.

பால் பதப்படுத்துதல் என்பது பாலை ஒரு குறிப்பிட்ட வெப்பநிலைக்கு சூடாக்கிப் பின் குளிரச் செய்வது ஆகும். பாலை பதப்படுத்துவதால் நோயை உண்டாக்கும் கிருமிகள் முற்றிலுமாக அழிந்து விடுகின்றன. பாலின் தரம் மற்றும் வாழ்நாட்கள் அதிகரிக்கப்படுகிறது.

பாலை கொழுப்புச்சத்து நிறைந்த வெண்ணையாகவும், நெய்யாகவும், புரதச்சத்து நிறைந்த பன்னீர் மற்றும் பாலாடைக்கட்டியாகவும், இனிப்பு சுவை மிக்க ரசகுல்லா, ரசமலாய், குலோப்ஜாமூன், பேடா பர்பியாகவும், புளிப்பு சுவை விரும்பிகளுக்கு யோகர்ட், தயிர் பொருட்களாகவும் தயாரித்து வழங்கலாம். மேலும் ஐஸ்கிரீம், பால்கோவா, சன்னா, மில்க்ஷேக் உள்பட பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களையும் பாலில் இருந்து தயாரிக்கலாம்.

பால் தொழிலில் தொழில்முனைவோர்களாக விரும்புபவர்கள் ஆரம்ப கால பயிற்சியை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், உழவர் பயிற்சி மையங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்ழகத்தின் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையங்கள், மாவட்ட அளவிலான கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை மற்றும் மாவட்ட அளவிலான வேளாண் அறிவியல் மையங்களில் பெறலாம். மேலும் இதற்கான தொழில் முனைவோர்களுக்கான திட்டங்கள் மூலமும் பயன் பெறலாம். பாலில் இருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் லாபம் அதிகம் கிடைக்கும் என்பதோடு, கிராமப்புற இளைஞர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு வருமானம் ஈட்டவும் வழிவகை ஏற்படும்.

இந்த தகவலை காமாட்சிபுரம் வேளாண் அறிவியல் மைய மனையியல் தொழில்நுட்ப வல்லுனர் ரம்யா சிவசெல்வி தெரிவித்தார்.